நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் தாழங்குப்பம் பகுதியிலே அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்க டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1995 ஆம் ஆண்டு கையெழுத்து இட்டார்கள். (மணியடிக்கப்பெற்றது). ஆனால் இதுவரையிலும் வேலை தொடங்கவில்லை. தொடங்குவதற்கு ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17-4-2002) காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

112. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைய விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் துறையின் 20-4-2001ஆம் நாளிட்ட 417 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைய சட்டத்தின் (மத்தியச் சட்டம் 39/1987) 30(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

109. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) கீழ் வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 9-8-1979ஆம் நாளிட்ட II (1)/வ.வ. & அ.நி./570/79 ஆம் எண் அறிவிக்கை மற்றும் 7-10-1988 ஆம் நாளிட்ட II(1)/வ.வ. & அ.நி./144 (n)/88 ஆம் எண் அறிவிக்கை ஆகிய அறிவிக்கைகள் ரத்து செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 8-2-2002 ஆம் நாளிட்ட 4 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

110. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து ஆறாவது அறிக்கை. (2001-2002)